பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

17 09 2026 THURSDAY 6 30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால பொதுசேவையை போற்றும் விதமாக, பிஜேபி சார்பில் இல்லங்கள் தோறும் இன்று தீபம் ஏற்றப்பட்டது.

2) நாட்டில் 100 கோடி பேர் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3) மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் போட்டியிட தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது.

4) நீலகிரி, கோவை உள்ளிட்ட ஆறு மாவட்டங்களின் ஒருசில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) வியட்நாம் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - பிரான்ஸின் Constantin Bittoun இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால பொதுசேவையை போற்றும் விதமாக, பிஜேபி சார்பில் இல்லங்கள் தோறும் இன்று தீபம் ஏற்றப்பட்டது.

சென்னையில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் தீபம் ஏற்றப்படுகிறது.

முன்னதாக, பிரதமரின் பிறந்த தினத்தை ஒட்டி, சென்னையை அடுத்த கொடுங்கையூரில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கலந்து கொண்டு, மபயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

>>>>>>>><<<<<<<

நாட்டில் 100 கோடி பேர் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

சமூகநீதி தொடர்பான உலகளாவிய மாநாட்டில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், 68 சதவீதம் பேர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருவதாக கூறினார்.

பொருளாதார வளர்ச்சியும், சமூக முன்னேற்றமும் இருந்தால் மட்டுமே நாடு வளர்ச்சியடைய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

நிலையான எதிர்காலத்திற்கு சமூகநீதி மிகவும் முக்கியம் என்று அவர் கூறினார்.

ஒத்துழைப்பின் மூலம் வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, திறன்களை மேம்பாடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>>>>><<<<<<<

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் போட்டியிட தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 9ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும்.

இதனிடையே, செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியில் 28 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதியில் 22 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>>><<<<<<<

தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும், குடும்ப அட்டைதாரர்கள் கைரேகை பதிவினை மேற்கொள்ள நாளை மறுநாள் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் உள்ள

நியாயவிலைக் கடைகளில் இந்த முகாம்கள் நடைபெறாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

ஓமன் நாட்டில், உற்பத்தி மற்றும் பராமரிப்பு பிரிவுகளில் பணியாற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக தமிழக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

Foundry தொழில்நுட்பத்தில் டிப்ளமோ அல்லது ஐ.டி.ஐ. தேர்ச்சிபெறறு, இரண்டு ஆண்டுகள் பணி அனுபவத்துடன் கூடிய, 22 முதல் 35 வயதிற்குட்பட்ட ஆண்கள், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன மின்னஞ்சல் வாயிலாக விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு, குறைந்தபட்ச மாத ஊதியமாக, 44 ஆயிரம் ரூபாய் முதல், 54 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரத்தில் உள்ள வேளாண் ஆராய்ச்சி மைய வளாகத்தில், மா உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் தொழில்நுட்பங்கள் குறித்த கருத்தரங்கு இன்று நடைபெற்றது.

இதனை தொடங்கி வைத்துப் பேசிய ஆட்சியர் திருமதி. லீலா அலெக்ஸ், மாவட்டத்தில் 50 ஆயிரம் மெட்ரிக் டன் மா உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<

நீலகிரி, கோவை உள்ளிட்ட ஆறு மாவட்டங்களின் ஒருசில இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>>>><<<<<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டம். சேந்தமங்கலம் மற்றும் பரமத்தி வேலூர் பகுதிகளில் 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த சமூக சேவை மையங்கங்களை இன்று

திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு மாநில அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் அடிக்கல் நாட்டினார்.

>>>>>>>><<<<<<<

சவுதி அரேபிய கடல்பகுதியில் கடற்கொள்ளையர்களின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மயிலாடுதுறையைச் சேர்ந்த இரண்டு மீனவர்களின் உடலுக்கு, திருச்சி விமான நிலையத்தில், மாநில அமைச்சர் திரு. ஸ்ரீநாத் அஞ்சலி செலுத்தினார்.

>>>>>>>><<<<<<<

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சமூகநீதி நாள் உறுதிமொழியினை அரசு ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

>>>>>>>><<<<<<<

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் மாநில சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 200 பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா இன்று நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், ஆட்சியர் திரு. வைத்திநாதன் தலைமையில் நாளை நடைபெற உள்ளது.

>>>>>>>><<<<<<<

ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் ஆலய திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு பந்தக்கால் முகூர்த்த நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<

திண்டிவனத்தை அடுத்த கொரளூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக இன்று நடைபெற்றது.

>>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

வியட்நாம் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - பிரான்ஸின் Constantin Bittoun இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-2 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Atharva Sharma - ஜப்பானின் Ryuki Matsuda இணையை வென்றது.

>>>>>>>><<<<<<<

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli - இங்கிலாந்தின் Naiktha Bains . இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<

இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறுகிறது.

தில்லியில் இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>>><<<<<<<

சண்டிகரில் நடைபெற்று வரும் இந்தியா-ஏ அணிக்கு எதிரான மூன்றாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் ஆஸ்திரேலியா-ஏ அணி சற்றுமுன்வரை 9 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 70 ரன் எடுத்துள்ளது.

>>>>>>>END<<<<<<<